# நெடுநல்வாடை

# Nedunalvaadai

***முனைவர் வி. பிரிட்டா ஜாஸ்மின்***
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்
தமிழ்த்துறை
பொறையார், இந்தியா

**Dr. V. Breeta Jasmin**
*Associate Professor & Head*
*Department of Tamil*
*T.B.M.L. College*
*Porayar, India*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூற்களுள் ஒன்றான நெடுநல்வாடை நக்கீரர் இயற்றியது. 188 அடிகள் கொண்டது. ஆகவாற் பாவால் ஆனது. பகைமேற்சென்ற தலைமகனின் பிரிவால் தலைமகள் துயர் அடைகிறாள். அவர்தம் துன்பம் போக்க அரசவைப் பெண்டிர் கொற்றவையை வழிபடுவது இப்பாடலின் துறையாகும். பருவ மாற்றங்களையும் வர்க்கம் சார்ந்த மக்கட் பிரிவுகளையும் துல்லியமாகக் காட்சிப்படுத்தும் நெடுநல்வாடை பண்டைய தமிழரின் பண்பாட்டுப் பொட்டகம் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.*

## Abstract

*Nedunalvaadai, one of the Sangam literature, was composed by Nakkir. It has 188 feets. It is made of internal fields. The heroine is saddened by the separation of the hero. The subject of this song is to worship the koravai to get rid of his suffering. It can be seen in this article that Nedunalvaadai is the cultural storehouse of the ancient Tamils, which accurately depicts seasonal changes and people differences.*

**Citation**

Breeta Jasmin, V. "Nedunalvaadai." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 70-74.

**பருவ நிலைகள்**

*கார்காலம் (ஆவணி, புரட்டாசி), குளிர்காலம் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனிக்காலம் (மார்கழி, தை), பின்பனிக்காலம் (மாசி, பங்குனி), இளவேனிற் காலம் (சித்திரை, வைகாசி), முதுவேனிற்காலம் (ஆனி, ஆடி) ஆகிய பெரும்பொழுதுகள் தமிழர் கண்டறிந்த பருவ நடைமுறைகள். "வலன் ஏர்பு வளைஇ" எனக் காற்றும் மழையும் வலம் சூழுதலைப் புலப்படுத்தும் புலவர் "பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென்" என்ற அடியில் முதுவேனிற் காலம் கார் காலமாக உருமாறுவதைச் சுட்டுகிறார். "பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண்மழைஃ அகல் இரு விசும்பில் துவலை கற்ப" என்ற அடிகளில் மேகங்கள் வான்நோக்கி உயர்ந்து மழை குறைந்து தூற்றலோடு கார்காலம் முடிந்து குளிர்காலம் தொடங்குவது உணர்த்தப்படுகிறது. "பெயல் கனைந்து கூதிர் நின்றது" என்ற தொடரின் வாயிலாக "கல்" என்ற ஒலியோடு வாடைக்காற்று வீசத்தொடங்கி குளிர்காலம் நிலைத்து நின்றது என அறிய முடிகிறது. தலைமகள் உறங்கிய பாண்டிலின் அருகில் இருந்த விளக்கின் சுடர்கள் தெற்கு பக்கம் சாய்ந்ததன் மூலம் வீசிய காற்று வாடைக்காற்று என உணர்த்தப்படுகிறது.*

**பருவ நிலைகளும் உயிரினங்களும்**

*ஏறுடை இன நிரைகளாக எருமைகள் ஆடுகள், மாடுகள் ஆகியன சுட்டப்படுகின்றன. மழை நின்று குளிர் தொடங்கும் கூதிர்காலத்தில் ஆற்றின் நீரோட்டம் குறைகிறது. ஏறுடை இன நிரைகளான எருமைகள், ஆடுகள், மாடுகள் ஆகியன மேய்ச்சலை மறப்பதும் மந்திகள், பறவைகள், கன்றுகள் மழையால் துயர் அடைதலும் கார்கால துன்பியலாகச் சுட்டப்படுகிறது. ஆற்றின் நீரோட்டம் குறைந்து, மீன்களின் எதிரோட்டமும் கொக்குகள் மற்றும் நாரைகள் மழை நின்று குளிர் தொடங்கும் குளிர் காலத்தின் காட்சிகளாகக் காட்டப்படுகிறது. மேலும் புல்லிய முசுண்டைக் கொடியில் வெண்மலர்கள்,பொன்னிற பீர்க்க மலர்களின் மலர்ச்சியும் இப்பருவ காலத்தின் அடையாளங்களாக விளங்குகின்றன. வீடுகளில் வளர்க்கப்படும் புறாக்கள் கொடுங்கை பலகைகளில் காலை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டிரந்தன. குளிர் காரணமாக அவை வெளியே பறக்கவில்லை என்றும் எடுத்துரைக்கப்படுகிறது. குளிரின் காரணமாகப் பயன்படுத்தப்படாத விசிறி முதலிய பொருட்களின் மீது சிலந்திகள் வலை பிண்ணின என்பது குறிப்பிடத்தக்கது.*

**இயற்கை சார் வாழ்வியல்**

*நகர்ப்புற மாந்தரான "முழு வலிமாக்கள்" என்போர் பருவ மாற்றத்தின் குளிர்ச்சியில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள் தாமரை, குவளை, கழுநீர், பச்சிலைகள் கொண்ட இலைகளை மாலையில் தம் தலைகளில்; அணிந்து கொண்டனர். நெல்லும் பிச்சியன் அரும்புகளும் தெய்வ வழிபாட்டுப் பொருட்களாக மக்கள் பயன்படுத்தினர். அதில் குளிர்ச்சி காரணமாக சந்தனம், கத்தூரி போன்றவற்றைத் தவிர்த்து முளரி, அகில், சரக்கரை ஆகியவற்றைத் தீயிலிட்டு குளீர் காலங்களில் மகளிர் மலர் சூடமாட்டார்கள் என்பதை "கூந்தல் மகளிர் கோதை புனையாள்" என்ற மரபு சுட்டுகிறது. வாடைக் காற்றின் துயரத்தை இளையோர் முதியோர் என இப்பருவத்தை அவர்கள் எதிர்கொண்டனர்.*

**நிலமும் நீரும்**

*மழை நீரை உள்வாங்கிய கமுக மரங்கள் அவற்றின் திவலைகளைச் சேமித்து வைத்துக் கொண்டன என்பதை "முழுமுதற் கமுக நுண்ணீர்" என்ற தொடர் விளக்குகிறது. "இருங்கனி*

*பரந்த ஈர வெண்மணல்" என வண்டல் மண் பரப்பு வருணிக்கப்படுகிறது. வயல்கள், நெற்கதிர்கள், மலைகள், சோலை வனங்கள் ஆகியனவும் இந்நூலில் வருணிக்கப்படுகின்றன.*

**இனக்குழுக்கள்**

*உலகில் உள்ள அனைத்துப் புவிப்பரப்புகளும் பன்மை சார்ந்த இனக்குழக்களால் சூழ்ந்தவைதாம் என்பதை நெடுநல்வாடை மூலம் அறியலாம். "கொடங்கோற் கோவலர்" என முல்லை நில மக்கள் அழைக்கப்படுகின்றனர். முழை எல்லோராலும் விரும்பப்படுதவில்லை. சிலருக்கு அது மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறத. சிலருக்குத் துன்பத்தை ஏற்படத்துகிறது. தாங்கள் வளர்ப்புச் செல்வங்களான கால்நடைகளும் புலம்பெயரும் அவலத்தை "ஏறுடை இன நிரை வேறுபுலம் பரப்பி புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்" என்ற அடிகள் உணர்த்துகின்றன. "மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் / ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு" என பண்டைய பாண்டிய நாட்டு நகரம் பொலிவோட காணப்பட்டதையும் அவ்வூரின் தெருக்களும் வருணிக்கப் படுகின்றன. இறுகிய தோள்களையும் முன்பின் தொங்கும் தோங்கலாடையும் கள் அருந்தும் தன்மையும் கொண்ட மாந்தர்கள் மழையினால் எந்த துன்பமும் பெறவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. காவல் பொருந்திய அகன்ற வீடுகளில் வாழ்ந்த நாகரிக மகளிர், யாழ் நரம்பின் இறுக்கத்தை உடற்சூட்டால் தணிக்கும் ஆடல் மகளிர், நரை விராவுற்ற நறுமென் கூந்தல் கொண்ட செம்முகச் செவிலியர், தோழியர் என பலநிலைப்பட்ட மகளிர் பற்றிய குறிப்புகள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. கைவல் கம்மியர். யவனர் பற்றிய செய்திகளும் குறிப்பிடத்தக்கவை.*

**வாழிபாட்டு நெறிகள்**

*கூதிர்ப்பருவத்தில் ஞாயிறு தோன்றாது. ஆகவே மகளிர்க்கு இல்லுறை வழிபாடு வலியுறுத்தப்படுகிறது. அதாவது வெளியிடங்கள் செல்லாமல் வீடுகளிலே வழிபாட்டு நடைமுறைகளைக் கடைபிடிப்பது "இல்லுறை வழிபாடு" எனப்படுகிறது. தனிமைத் துயர் தலைமகளை வாட்டுகிறது. ஆவரை ஆறுதர்படுத்த "இன்னே வருகுவர் இன்துணையோர்" என்ற செவிலியரின் வார்த்தைகள் நேர்மறையான உரைகளின்* (Postive Conversation) *பயனை உணரத்துகிறது. "செல்வனொடு உலைஇய உரோகிணி" என்ற தொடர் திரையில் வரையப்பட்டு தலைமகள் உறங்கும் கட்டிலின் தலைமாட்டில் மாட்டப்பட்டுள்ளது. பிரிவுகள் தற்காலிக மானவை என்ற சிந்தனையை இது எடுத்துக்காட்டுகிறது. மன்னன் போரில் வெற்றி பெற கொற்றவை வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.*

**அரண்மனை வருணனை**

*தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவராக அறியப்படுகிறார். ஆவர் வாழ்ந்த அரண்மனையின் சிறப்புகள் இந்நூலில் மிகுதியாக வருணிக்கப்பட்டுள்ளது. ஆரண்மனையின் அனைத்துப்பகுதிகளிலும் சூரிய ஒளிபடரும் வண்ணம் சூரியன் உச்சி;யில் உள்ள நேரத்தில் தெய்வ வழபாட்டுடன் கட்டிடக்கலை வல்லுநர்களால் அரண்மனையின் கட்டமைப்பு திட்டமிடப்பட்டது. போரில் வெற்றி பெற்ற படைகள் யானைகளில் வெற்றிக் கொடிகளை உயர பிடித்தபடி நகருக்குள் நுழைவது வழக்கம், அவ்வாறு வரும் படைகள் தங்கள் கொடிகளைச் சிறிதும் தாழ்த்தாத வண்ணம் கோட்டைக்குள் நுழையும் வண்ணம் கோபுர வாசலின் உயரம் இருந்தது. பருத்த இரும்பு, செவ்வரக்கு, குவளை ஓவியம், புதுப்பிடிகள், வெண்சிறு கடுகின் பூச்சு ஆகியன கோட்டையின் கதவுகளுக்கு வலிவையும் பொலிவையும் தந்தன.*

**அரண்மனை முற்றம்**

*அரண்மனையின் முற்றம் ஆற்று மணற்பரப்பால் ஆனது. நுலவொறி எதிரொளிக்கும் சிறப்புடையது. கவரிமா, அன்னம், குதிரை ஆகியவை உலா வரும் தன்மை உடையது. முழை நீரை அளிக்கும் அல்லது சேமிக்கம் "அம்பணம்" என்ற கருவி அங்கு பொருத்தப்பட்டிருந்தது. அதில் விழும் மழைநீர் வழியும் சத்தம் அருவி சத்தத்தை ஒத்தது என்பதனால் மயில்களின் ஆரவாரம் கோவிலின் ஆரவாரத்தை நினைவூட்டியது.*

**அருங்கடி வரைப்பு**

*மன்னர் புழங்கும் இடமே "அருங்கடி வரைப்பு" எனப்படுகிறது. குற்றேவல் புரிவோரும் அணுக இயலா வண்ணம் காவற்பகுதி கொண்டது. மலைபோன்ற உயரம், வானவில் போன்ற வண்ணமயம், வெள்ளியைப் போன்ற சுண்ணாம்பு. நீலமணி போன்ற தூண்கள், செம்பு போன்ற ஓவியம் ஆகியன கோட்டையின் கர்ப்பக்கிரகத்தை அணி செய்தன.*

**அரண்மனைக் கட்டில்**

*"பாண்டில்" எனச் சுட்டப்படும் அரண்மனைக் கட்டில் "சீரும் செம்மையும் ஒப்ப வல்லோன்" எனப் பாராட்டப்படும் கைவினைஞர்களின் திறத்துக்கு எடுத்துக் காட்டாக இக்கட்டில் விளங்குகிறது. உள்ளிப் பூண்டுப்பல் போன்ற தோற்றத்தில் இக்கட்டிலின் கால்கள் வலிமையோடு விளங்கின. புலகணி போன்ற முத்துகளின் தொடர் மாலைகள், புலியின் வரிகள் பொருந்திய தகடுகள், அரிமாவின் வேட்டை மற்றும் காட்டுப் பூக்கள் ஆகியற்றின் காட்சிகள் பதிந்த ஓவியப் போர்வை, காதல் கைகொள்ளும் அன்னப்பறவை இணைகள் உதிர்க்கும் இறகுகளால் ஆன மென்மையான தலையனைணகள், "காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து" தலையணை உறை ஆகியன கட்டிலின் அழகுக்கு அணிசேர்த்தன.*

**தலைமகளின் தனிமைத் துயர்**

*தலைமகன் மன்னன் போர்க்களத்துக்குச் சென்றவன் இன்னும் நாடு திரும்பவில்லை. தனிமைத்துயர் தலைமகளை வாட்டுகிறது. வண்ணங்கள் இட்டு எழுதாத வடிவக் கோட்டின் ஓவியத்தை ஒப்ப தலைமகளின் நிலை காணப்படுகிறது. மகரக் குழை, பொன்தொடி போன்ற மீனின் வளைந்த வாயை ஒத்த மடக்கு (மோதிரம்) போன்ற அணிகலன்களைத் தவிர்த்து மாசுபட்ட ஆடை, சங்கு வளை மட்டுமேஅணிந்திருந்தனர். மாந்தளிர் போன்ற மேனியும் மூங்கிள் போன்ற தோள்களும், தாமரை அரும்பு போன்ற கொங்கைகளையும் உடைய தோழியர் தமைகளின் அடிகளை வருடித் தூங்க வைக்க முயற்சிக்கின்றனர். செவிலியரும் நம்பிக்கை வார்த்தைகளை மொழிகின்றனர். மன் வரைவில் நாடுதிரும்ப கொற்றவை வழிபாடும் நடைபெறுகிறது.*

*யவனர் இற்றிய வினைமான் பாவை, ஒடை என்ற யாகைளின் நெற்றிப்பட்டம் விசிறி, இரும்பு விளக்கு, நெய்திரிகள், அழகிய சிவந்த ஆலவட்டம் தென்றற்காற்றைத் தரும் பலகணிகளின் திண்ணிய கதவுகள் போன்றவை நெடுநல்வாடை நூலின் வாயிலாக அறியப்படும் புழங்கு பொருட்களாகும்.*

*உவமைகளைத் தவிர்த்து பண்டைய தமிழ் இலக்கிய்களைக் காணுதல் அரிது என்பதற்குப் பல சான்றுகள் இக்கட்டுரையில் கண்டோம். சங்கு போன்ற வளையல், மூங்கில் போன்ற தோள், முத்துப் பற்கள் போன்ற உவமைகள் வழியாக பாதாதிகேச வருணனை மட்டுமே நோக்கமன்று மாறாக உவமையாக எடுத்துரைக்கப்படும் பொருட்கள் வாயிலாக பழந்தமிழக தவார, விலங்கின, கனிமவளங்கள் புலப்படுத்தப்படுகின்றன.*

**மன்னன் நிலை**

*பகைவரின் கைகள் மன்னரின் யானைகளைக் கொன்றன. பின் வீரர்களைப் பதம்பாரத்தன வேப்ப மாலையத் தலையில் படைத்தலைவன் துணையோடு மிகுதியாகக் காயம் பட்டோரை முதலிலும், குறைவாகக் காயம் பட்டோரை அடுத்தும் மன்னன் பார்வையிட்டார். குதிரைகள் யானைகள் சேனைகளுடன் நிற்கும் காட்சி போர் இன்னும் நிறைவடையவில்லை என்பதைக் காட்டுகிறது. இருளில் உறங்காமல் மழைத்துளிகளைக் கொற்றவெண்குடை மறைக்க சிலர் துணையுடன் மன்னன் வெற்றி வாகை சூடுகிறான்.*

**துணைநூற் பட்டியல்**


1. *மா. இராசமாணிக்கனார் - பத்துப்பாட்டு ஆராய்ச்சி*
2. *ச. வே. சுப்ரமணியம் - பத்துப்பாட்டு மூலமும் உரையும்*
3. *எம்.பி. ஜெகத்ரட்சகன் - நெடுநல்வாடை உரை*
4. *ஆழ்வார் பதிப்பகம்.*